**வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம்**
**2021 பெப்ரவரி 2 ஆம் திகதி உலக ஈர நிலங்கள் தினத்தை கொண்டாடும் நோக்கில் கல்வி அமைச்சின் அங்கிகாரத்துடன் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் ஒருங்கிணைந்து விஜய செய்திப் பத்திரிகைக் கம்பனியின் ஊடக அனுசரனையுடன் நாடு பூராக நடாத்தப்படுகின்ற ஈர நிலங்கள் பற்றிய குறுகிய சமர்ப்பிப்பு (short presentation competition) போட்டி – 2021**

உலகின் உயிரியல் பல்வகைமை விஞ்ஞான ரீதியாகவும், சுற்றாடல் விஞ்ஞான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மிகவும் முக்கியமாக கருதுகின்ற ஈரநிலங்களை சுற்றாடலில் பாதுகாத்துக் கொள்வதில் இலங்கையும் ஒரு பங்குதாரராகும். தற்பொழுதுள்ள ஈரநிலங்கள் சூழலுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களின் காரணமாக இவை பாரிய அளவில் அழிவடைந்து வருகின்றன. உயிரியல் கட்டமைப்புச் சூழலுக்கு பாரிய அளவில் பங்களிப்பை வழங்குகின்ற இந்த ஈர நிலங்களை பாதுகாப்பது நாங்கள் செய்ய வேண்டிய பணியாகும். எனவே ஈர நிலங்களின் பெறுமதிகள் பற்றி பாடசாலை மாணவர்கள் மட்டுமல்லாது சமூகத்தை அறிவுறுத்துவதன் ஊடாக ஈர நிலங்களை பாதுகாப்பதில் சாதகமான மனோபாவத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்தப் போட்டி நடைபெறும்.

**1. போட்டி தொடர்பான விபரம் :**

(i) இம்முறை ஈர நிலங்கள் தினத்தின் தலைப்பான “ஈர நிலங்கள் மற்றும் நீர்” “Wetlands and Water” என்ற பிரதான தலைப்புடன் பொருந்தும் தமது வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள அல்லது தமக்கு விருப்பமான ஏதேனுமொரு ஈர நிலம் தொடர்பில் அல்லது அந்த ஈர நிலத்தின் பெறுமதி தொடர்பில் மைக்ரோ சொப்ட் பவர்பொயின்ட் (micro soft power point) உதவியுடன் குறுகிய சமர்ப்பிப்பொன்றை (short presentation )தயார் செய்தல் வேண்டும். இந்த சிறிய சமர்ப்பிப்பு இறுதியில் ஈர நிலங்களைப் பாதுகாக்கும் முக்கியத்துவம் பற்றிய செய்தியொன்றை வழங்குதல் வேண்டும். இந்தச் சமர்ப்பிப்பு பின்வரும் விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

- ஈர நிலங்களின் அமைவிடம் ( மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு, கிராம சேவையாளர் பிரிவு, கிராமம் பற்றிய விபரம் உள்ளடங்கலான வரைபடமொன்று)
- அதன் பெறுமதி ( சுற்றாடல் ரீதியான, சமூக ரீதியான, தொல்பொருளியல் ரீதியான, கலாசார ரீதியான)
- அதனுடன் தொடர்புடைய புகைப்படம்
- விஸ்தீரணம் (அண்ணளவாக)

(ii) இந்தக் குறுகிய சமர்ப்பிப்பு 2 – 5 நிமிட காலத்திற்கு மட்டுப்பட்டிருத்தல் வேண்டும். இது தொடர்பாக பொருத்தமான தலைப்பொன்றை வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(iii) இது தொடர்பாக பொருத்தமான பிரகாரம் எந்தவொரு எழுத்துரு அல்லது தேவையான பிரகாரம் புகைப்படங்களையும் வீடியோக் காட்சிகளையும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

(iv) சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் ஆக்கங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரியின் பங்குபற்றல் :

போட்டி 2 தொகுதிகளின் கீழ் நடைபெறும்.

1. பாடசாலைப் பிரிவு
2. பல்கலைக் கழக மாணவர்கள் தொடர்பாக

<u>பாடசாலைப் பிரிவு</u>

இந்நாட்டின் சகல அரச மற்றும் தனியார் பாடசாலைகளின் மாணவ / மாணவர்கள் பின்வரும் தொகுதிகளின் கீழ் ஆக்கங்களை சமர்ப்பிக்க முடியும்.

குழு 01 – ஆண்டு 6 முதல் 8 வரை

குழு 02 – ஆண்டு 9 முதல் 11 வரை

குழு 03 – ஆண்டு 12 முதல் 13 வரை

<u>பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாக</u>

இந்த நாட்டின் சகல அரச மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களின் 1,2,3,4 ஆம் ஆண்டு மாணவர்கள் ( இறுதி வருட பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கின்ற மாணவர்கள்) ஆகியோர் ஆக்கங்களை சமர்ப்பிக்க முடியும்.

3. போட்டியாளர்களை தெரிவு செய்தல் மற்றும் பரிசில்களை வழங்குதல் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிட்ட பிரகாரமாகும் :

| **குழுக்கள்:** | 1 ஆம் இடம் | 2 ஆம் இடம் | 3 ஆம் இடம் |
|---|---|---|---|
| குழு 01- 6 ஆம் ஆண்டு முதல் 8 ஆம் ஆண்டு வரை | 30,000 | 25,000 | 20,000 |
| குழு 02- 9 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரை | 30,000 | 25,000 | 20,000 |
| குழு 03 – 12 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரை | 30,000 | 25,000 | 20,000 |
| பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாக | 40,000 | 35,000 | 30,000 |

இதற்கு மேலதிகமாக தகைமைச் சான்றிதழும் வழங்கப்படும்.

**4. போட்டி நிபந்தனைகள் -**

i. போட்டியில் பங்குபற்றுகின்ற சகல பாடசாலை மாணவர்களும் இலங்கை பாடசாலையொன்றின் மாணவ மாணவியாக மாத்திரமேயிருத்தல் வேண்டும்.
ii. சகல விண்ணப்பதாரிகளும் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்து பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.
iii. பாடசாலை விண்ணப்பதாரிகளின் ஆக்கங்கள் சுயமான ஆக்கங்கள் என தாய் /தந்தை/ பொறுப்பாளர் சான்றுப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.
iv. நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்படும் சகல வெற்றி பெற்ற ஆக்கங்கள் அவற்றுக்குச் சொந்தமான மாணவ / மாணவிகள் தமது பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவ / மாணவிகள் என அதிபர்/பிரதி அதிபர்/ உதவி அதிபர் அவர்களினால் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு திணைக்களத்தினால்

நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்ள இயலாத சந்தர்பத்தில் அந்த ஆக்கங்களை நீக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

v. ஒரு விண்ணப்பதாரி ஒரு ஆக்கத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

vi. போட்டிக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற சகல ஆக்கங்களும் விண்ணப்பதாரியின் சுயமான ஆக்கமாக இருக்க வேண்டியதுடன் இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட எந்தவொரு போட்டியிலும் அந்த ஆக்கம் சமர்ப்பிக்கப்பட்டு வெற்றிபெற்ற ஆக்கமாக இருத்தல் கூடாது.

vii. வெற்றி பெற்ற ஆக்கங்கள் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் விஜய செய்திப் பத்திரிகைக் கம்பனியின் இணைய தளங்களில் வெளியிடப்படுவதுடன் அதன் உரிமையும் அந்நிறுவனங்களையே சாரும்.

viii. சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள் மீள விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட மாட்டாது.

ix. ஏற்பாட்டுக் குழுவினால் வெற்றிபெற்ற ஆக்கங்கள் வர்த்தக நோக்கில் அல்லாத ஊடக மற்றும் விளம்பர மற்றும் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக ஈடுபடுத்திக் கொள்வதற்கு விண்ணப்பதாரி உடன்படல் வேண்டும்.

x. இந்தப் போட்டிக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற ஆக்கங்கள் தொலைந்து போதல், சேதமடைதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் ஏற்பாட்டுக்குழு பொறுப்புக் கூறாது.

xi. மேற்படி நிபந்தனைகளுக்கு முறனாக செயற்படல், பூரணமற்ற விண்ணப்பப் படிவங்களை அனுப்புதல் அல்லது தாமதமாக விண்ணப்பித்தல் ஆக்கங்கள் மறுக்கப்படுவதற்கான காரணங்களாகும்.

xii. மேற்படி போட்டியின் தீர்ப்பு உரிய துறைகளில் நிபுனத்துவம் பெற்றவர்களை உள்ளடக்கிய நடுவர் சபையினால் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நடுவர் சபையின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.

**5. ஆக்கத்தை சமர்ப்பித்தல் -**

i. மேற்படி ஆக்கங்களை கையேற்கும் இறுதித் திகதி 2021.01.21 ஆம் திகதியாகும்.

ii. அனுப்பப்படுகின்ற சகல ஆக்கங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் மின் அஞ்சல் ஊடாக dwcnrm@gmail.com என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படுகின்ற மின் அஞ்சல் செய்திகள் தொடர்பாக பதில் செய்தியொன்றின் ஊடாக மீள அறிவிப்பதோடு அவ்வாறு கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்படாவிட்டால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக விசாரித்துக் கொள்ள முடியும்.

iii. போட்டி பற்றிய மேலதிக தகவல்களை www.dwc.gov.lk, www.cea.lk, என்ற இணைய தளங்களிலிருந்து அல்லது கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் : 011 – 2888585, இயற்கை வளங்கள் முகாமைத்துவ பிரிவின் நீடிப்பு இல 643

பணிப்பாளர் நாயகம்
வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம்
இல 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுள்ளை

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

2021 பெப்ரவரி 2 ஆம் திகதி உலக ஈர நிலங்கள் தினத்தை கொண்டாடும் நோக்கில் நடாத்தப்படுகின்ற நாடு பூரான குறுகிய சமர்ப்பிப்பு போட்டி (short presentation competition)

1. ஆக்கத்தின் தலைப்பு : ......................................................................................................
2. i. போட்டியாளரின் பெயர்: :....................................................................................................

   ii. ஆங்கில மொழியில்: ........................................................................................................
3. i. தனிப்பட்ட முகவரி : ........................................................................................................

   ii. ஆங்கில மொழியில்: ...................................................................................................... .

   தொலைபேசி இல: நிலையான - .................................. கையடக்க - .....................................
4. தேசிய அடையாள அட்டை இல (பாடசாலை ஆசிரியர்களாயின் மாத்திரம் குறிப்பிடவும்) : ..........................................
5. பல்கலைக்கழக மாணவர்களாயின் பல்கலைக்கழக அடையாள அட்டை இலக்கம் ( அதன் பிரதியை இணைக்கவும்): ............................
6. ஆண் / பெண் : ...........................
7. பிறந்த திகதி : ........................................ வயது ..................................
8. i. பாடசாலையின் / பல்கலைக் கழகத்தின் பெயர் மற்றும் முகவரி :

   .........................................................................................

   .........................................................................................

   ii. ஆங்கில மொழியில் : ...........................................................................................

   ..............................................................................................

   iii பாடசாலையின்/பல்கலைக்கழகத்தின் தொலைபேசி இலக்கம்
9. தரம் : ......................................................................................................
10. பல்கலைக்கழக மாணவராயின் ஆண்டு: ........................ ..................... ........... ....

இத்துடன் உள்ள குறுகிய சமர்ப்பிப்பு எனது ஆக்கம் என்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானதும் சரியானதும் என்றும் போட்டி தொடர்பில் வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் குறிப்பிடப்படுள்ள சகல சட்டதிட்டங்களுக்கும் உடன்படுவதாகவும், தமது வெற்றி பெற்ற ஆக்கம் வர்த்தக நோக்கமல்லாத பாதுகாக்கும் செயற்பாடுகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் விஜய செய்திப் பத்திரிகை கம்பனியால் பயன்படுத்திக் கொள்வதற்கும் காட்சிப்படுத்திக் கொள்வதற்கும் நான் உடன்படுவதாகவும் சான்றுப்படுத்துகின்றேன்.

**திகதி : ....... ........... ............. ............ கையொப்பம் : ......... ........ .........**

.